

# எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?

Produced By : **EVANGEL CHURCH**

"இயேசு கிறிஸ்துவைக் குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத் தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வானவர், மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும் பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார்". (ரோமர் 1:4-5)

"இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்". (I கொரிந்தியர் 2:2)

ஷேக்ஸ்பியர் எழுதிய புத்தகத்தில் :

ஜூலியஸ் சீசர் ஒரு மாபெரும் வீரன்! ஆனால், ஒரு கூட்டத்தினர் அவன் மீது பொறாமை கொண்டு அவனைக் கொல்ல தீர்மானித்தார்கள். ஆகவே, அவனுடைய நெருங்கிய நண்பன் புரூட்டஸ் என்பவனை விரோதிகள் சந்தித்து, அவனிடம் நயவஞ்சக வார்த்தைகளைக் கூறி, அவனை ஜூலியஸ் சீசருக்கு விரோதமாக எழுப்பினார்கள்.

ஒருநாள் ஜூலியஸ் சீசர் தனியாக இருக்கும் பொழுது, அவன் மூலமாக அந்த விரோதிகள் ஜூலியஸை சூழ்ந்து கொண்டு ஒவ்வொருவராக கத்தியினால் குத்தினார்கள். அந்த நேரத்திலும் ஜூலியஸ் சீசர் தனக்கு இருந்த வலிமையினால் அத்தனைப் பேரையும் தூக்கி வீசினான்.

கடைசியில் தன் நண்பன் புருட்டஸ் வந்தபொழுது, ஜூலியஸ் அதிர்ச்சி அடைந்தவனாய், "புருட்டஸ், நீயுமா? அப்படியானால் நான் சாகட்டும்" என்று கூறி, உள்ளமுடைந்தவனாய் அதே இடத்தில் விழுந்து மரித்தான்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அப்படித்தான். தான் அதிகமாய் நேசித்த சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ் என்பவன் அவரண்டையில் சேர்ந்து ரபீ, ரபீ என்று சொல்லி அவரை முத்தஞ் செய்தான். அவரைக் காட்டிக் கொடுக்கிற யூதாஸ், "நான் எவரை முத்தஞ் செய்வேனோ, அவரைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டு போங்கள்," என்று அவர்களுக்குக் குறிப்புச் சொல்லியிருந்தான். இயேசு காட்டிக் கொடுக்கப்பட்டார்.

இயேசு கிறிஸ்துவை தேசாதிபதியின் முன்



கொண்டு போகப்பட்டபோது, அவன் அவரை நிந்தித்துப் பரியாசம் பண்ணி, சிவப்பான வஸ்திரத்தை உடுத்தச் சொல்லி, பிலாத்துவினிடத்தில் அனுப்பினான். பிலாத்து அவரை வாரினால் அடிபித்தான். முள்ளுகளால் ஒரு கிரிடம் பண்ணி, அவர் தலை மேல் வைத்து அவர் வலது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்கால் படியிட்டு, யூதருடைய ராஜாவே வாழ்க என்று அவரைப் பரியாசம் பண்ணி அவர் மேல் துப்பி அந்தக் கோலை எடுத்து அவரை அடித்தார்கள்.

இயேசு கிறிஸ்துவை யூதர்கள் கொல்லுகிறதாக இருந்தால் கல்லெரிந்து கொன்றிருப்பார்கள். ரோமரோ அந்நியரைக் கொல்லும்போது செய்த வழக்கப்படி அவரைச் சிலுவையிலறைய கட்டளையிட்டார்கள்.

இயேசு கிறிஸ்து தேவனாயிருந்தும் மனித ரூபம் எடுத்ததினால் மனித ஜாதிக்கு இரட்சகராயிருக்கத் தகுதியுள்ளவரானார்.

பாவத்தில் வாழ்ந்து மரித்து கொண்டிருக்கிற மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் இரட்சிக்கும்படியாக இயேசு கிறிஸ்து பாடுகள்

அநுபவித்தவருமாயிருந்தார்.

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

நாமெல்லோரும் ஆடுகளைப் போல வழி தப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லோருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப் பண்ணினார்".

(ஏசாயா 53:5-6)

இயேசு கிறிஸ்து மனித சுபாவமுள்ள வரானதால் நமது பலவீனங்களையும், அனுபவங்களையும், நமது துக்கங்களையும் பாவங்களையும் அறிந்து நமக்காக பரிதபிக்கத்தக்க நிலையில் இருக்கிறார்.

இயேசு கிறிஸ்து சிலுவையைச் சுமந்தவராய், பட்டணத்துத் தெருக்கள் வழியோ, கொல்கொதாவுக்கு நூற்றுக்கதிபதியும் நான்கு சேவகர்களும் அவரை நடத்திக் கொண்டு போனார்கள்.



இயேசு கிறிஸ்து சிலுவையின் பாரத்தால் தள்ளாடி விழுந்தபோது, சிமோன் என்ற ஒருவனைக் கூடச் சுமந்து போகும்படிச் செய்தார்கள்.

குறித்த இடத்தில் போய்ச் சேர்ந்தபோது அவருடைய உடுப்புகளைக் கழற்றினார்கள். அந்த உடுப்பு நான்கு சேவகர்களுக்கும் வழக்கத்தின்படி விடப்பட்டது.

நமது ஆண்டவரை கல்வாரி சிலுவையில் ஆணிகளால் அடித்தார்கள்.

நமக்காக சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டு தன்னுடைய இரத்தம் முழுவதும் சிந்தினார்.

'இயேசு'.... "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்". (I கொரிந்தியர் 15:3-4)

உயிர்தெழுந்த பின் அவருடைய கைகளில் ஆணிகளினால் உண்டான காயங்களிருந்தன.

அதைக் கண்டபோதே 'சந்தேகப்படுகிற தோமா' விசுவாசித்தான்.

இயேசு நாற்பது நாட்களாய் நமது சீஷருக்கும், மற்றவர்களுக்கும் தம்மைப் பிரத்தியட்சமாக வெளிப்படுத்தினபின், பரலோகம் சென்றார். அங்கே தமது பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து எல்லா வல்லமையோடும் தமது ஜனங்களுக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கிறார்.

அவர் தேவனாயிருக்கிறபடியால் நம்மைத் தீங்குகளிலும், சோதனைகளிலும் இருந்து விடுவித்து, பாவத்தையும் பிசாசையும் ஜெயிக்கவும், கடைசியில் அவரிடம் சென்று நித்திய காலமும் அவர் சமூகத்தில் ஜீவிக்க கூடியவர்களாக நம்மை மாற்றவும் வல்லவராயிருக்கிறார்.

"அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார்". (I கொரிந்தியர் I:3I)

நம்மை நேசித்து நம்மில் அநுதாபமாயிருக்கிற பிதா ஒருவர் நமக்காக பரலோகத்தில் இருக்கிறார் என்பதையும் வெளிப்படுத்தினார்.



இயேசு கிறிஸ்து பாவத்தைப் போக்கும் பலியானார் என்று விசுவாசித்து இயேசு கிறிஸ்துவண்டை வரும்போது சகலத்திலும் விடுதலையை பெற்றுக் கொள்ளுவோம்."... இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்". (I யோவான் I-7)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உன்னை நேசிக்கிறார். நீ அவரை நம்பாவிட்டாலும், அவர் உன்னை நேசித்து உன்னை ஆசீர்வதிக்க உன்னைத் தேடி வருகிறார்.

நீங்கள் யாராயிருந்தாலும் உன் பாவங்களையும், சாபங்களையும் இயேசு கிறிஸ்து சிலுவையில் சுமந்து தீர்த்து விட்டார் என்று விசுவாசித்து உன் பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிடு.

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்". (I யோவான் I-9)

மனந்திரும்புங்கள். பரலோக ராஜியம் சமீபித்திருக்கிறது.

கிறிஸ்துவின் பணியில்

சகோ. ராஜா ஆறுமுகம்



# எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்?

Produced By : **EVANGEL CHURCH**